செய்தி வெளியீடு எண்.4/2017 நாள் 24.01.2017

**தமிழகத்தில் நகர்ப்புர மற்றும் ஊரகப் பகுதிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் ஆய்வு.**

*******

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகள் மற்றும் 12524 ஊராட்சிப் பகுதிகளில் வாழும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்தும், உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் விநியோகப் பணிகள் மற்றும் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் குறித்தும் அலுவலர்களிடம் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கத்தில் இன்று (24.1.2017) விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் நகர்ப்புர மற்றும் ஊரகப் பகுதிகளில் குடிநீர் விநியோகப் பணிகளை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நகராட்சி நிர்வாகத்துறை, பேரூராட்சிகள் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு

வரும் குடிநீர் விநியோகம், அவற்றின் அளவு மற்றும் நீர் இருப்பு குறித்தும் தனித்தனியாக ஆய்வு மேற்கொண்டார். மேலும் பருவமழை பொய்த்த காரணத்தால் கோடை காலத்தில் ஏற்படவுள்ள குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்தும், கோடை காலத்தில் பொது மக்கள் பாதிக்காத வகையில் குடிநீர் வழங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் அலுவலர்களிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

**<u>சென்னை மாநகரம்</u>**

- சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளின் மொத்த கொள்ளளவான **12522** மில்லியன் கன அடியில் நாளது தேதியில், 1412 மில்லியன் கனஅடி நீர் மட்டுமே அதாவது 11% மட்டுமே இருப்பில் உள்ளது. கடந்த ஆண்டில் இதே தேதியில் **9993** மில்லியன் கனஅடி நீர் இருப்பு இருந்தது.
- மீஞ்சூர் மற்றும் நெம்மேலி கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்களிலிருந்து நாளொன்றுக்கு தலா 100 **MLD** குடிநீர் பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.
- பருவமழை பொய்த்ததன் காரணமாக அனைத்து ஏரிகளிலும் நீர் இருப்பு குறைந்த அளவே இருந்த போதிலும் தற்போதுள்ள கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் உள்ளிட்ட குடிநீர் ஆதாரங்கள் மூலம் **நாளொன்றுக்கு 550 மில்லியன் லிட்டர்** குடிநீர் அளவு வழங்கப்பட்டு வருகிறது.

- **சென்னை மாநகரின் கோடை கால குடிநீர்த் தேவையை சமாளிக்க 61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

  - பரவனாறு ஆற்றிலிருந்து நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் நீர் எடுப்பதற்கு ஏதுவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

  - நெய்வேலி நீர்ப்பரப்பு பகுதியில் நிறுவப்பட்டுள்ள 45 ஆழ்துளை கிணறுகளில், தற்போது பயன்பாட்டில் உள்ள 10 ஆழ்துளை கிணறுகள் மூலம், நாளொன்றுக்கு சுமார் 10 மில்லியன் லிட்டர் நீர் எடுக்கப்பட்டு வீராணம் குடிநீர் குழாய் மூலம் சென்னைக்கு எடுத்து வரப்படுகிறது.

  - மீதமுள்ள 35 ஆழ்துளை கிணறுகளை புனரமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவுற்றதும், இதன் மூலம் நாளொன்றுக்கு கூடுதலாக 20 MLD நீர் பெறப்பட்டு ஆக மொத்தம் சென்னை மாநகருக்கு 30 MLD வீராணம் குடிநீர் குழாய் மூலம் சென்னைக்கு எடுத்து வரப்படும்.

  - **பரவனாறு ஆற்றுப்படுகையில் கூடுதலாக விசைப்பம்புகள் அமைக்கவும், மற்றும் நெய்வேலி** நீர் பரப்பு பகுதியில் உள்ள 35 ஆழ்துளை கிணறுகளை புனரமைக்க ரூ.5.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

  - திருவள்ளூர் மாவட்டம், பூண்டி மற்றும் தாமரைப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள சுமார் 300 விவசாய கிணறுகளை வாடகைக்கு அமர்த்தும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இன்றைய தேதியில், 118 விவசாய கிணறுகளிலிருந்து நாளொன்றுக்கு 40 மில்லியன் லிட்டர் அளவிற்கு நீர் எடுக்கப்பட்டு வருகின்றன.

  - அடுத்த மாத இறுதிக்குள், 300 விவசாய கிணறுகள் மூலம் நாளொன்றுக்கு சுமார் 100 **MLD** நீர் பெறப்பட்டு சென்னை மாநகரில் விநியோகம் செய்யப்பட உள்ளது .

- சென்னை மாநகரில் ஏற்கனவே, 6,000, 9,000 மற்றும் 16,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 520 லாரிகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

- கோடைகால குடிநீர்த் தேவையை சமாளிக்க மேலும் 100 லாரிகளை வாடகைக்கு அமர்த்த துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் 4,200 லாரி நடைகளின் எண்ணிக்கை 6,500 நடைகளாக அதிகரிக்கப்படும். மேலும், தேவைக்கேற்ப லாரி நடைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும்.

- தற்போது சென்னை மாநகரில் உள்ள 10500 பிளாஸ்டிக் குடிநீர் தொட்டிகளுடன், கூடுதலாக 500 புதிய பிளாஸ்டிக் தொட்டிகள் நிறுவவும், பழுதான தொட்டிகளை சரி செய்யும் பணிகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

- பழுதடைந்துள்ள இந்தியா மார்க் 2 பம்புகளை சரி செய்யவும், தேவைக்கேற்ப இந்தியா மார்க் 2 பம்புகள் புதிதாக அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- சென்னை மாநகருடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிலத்தடி நீரின் தன்மைக்கேற்ப புதிதாக தேவைப்படும் ஆழ்துளை கிணறுகள் நிறுவுவதற்கு ஆயத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- சோழவரம், செங்குன்றம் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளின் கடைநீர் இருப்பில் **(Dead storage)**, மொத்தம் 409 மில்லியன் கன அடி நீரை உபயோகிக்க ஏதுவாக பம்ப்செட்டுகள் மூலம் இறைத்து சென்னை மாநகருக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

- அனைத்து ஏரிகளிலும் நீர்வற்றிப் போகும் சூழ்நிலை ஏற்பட்டால், காஞ்சிபுரம் மாவட்டம், மாமண்டூர், பாலூர் மற்றும் கருங்குழி ஆகிய தொலை தூரப் பகுதிகளிலிருந்து லாரிகள் மூலம்

நாளொன்றுக்கு சுமார் 500 நடை லாரிகள் மூலம் 10 மில்லியன் லிட்டர் நீர் கொணரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல தமிழகத்தின் இதர பகுதிகளில் வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்தும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அலுவலர்களிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் 547 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் நகர்ப்புரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் 4.18 கோடி மக்கள் பயன்பெறும் வகையில் நாளொன்றுக்கு 2061 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க வடிவமைக்கப்பட்டு, தற்சமயம் நாளொன்றுக்கு 1652 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

- கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கி, குடிநீர் வழங்கும் பொருட்டு, புதிய ஆழ்துளைக் கிணறுகள், புதிய நீர் உறிஞ்சு கிணறுகள் அமைத்தல், பழைய ஆழ்துளைக் கிணறுகளை சுத்தப்படுத்துதல் உள்ளிட்ட 1476 நீராதார புனரமைப்பு பணிகள் **ரூ.85.96 கோடி** மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- இவை தவிர, வறட்சியின் காரணமாக ஏற்படக்கூடிய குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கிட, கூடுதலாக **ரூ.85.67 கோடி** மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது.

**நகர்ப்புர உள்ளாட்சிகள்**

- சென்னை நீங்கலாக உள்ள 11 மாநகராட்சிகளில் கோடை காலத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் நிலையில் உள்ள மதுரை மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகளில் சிறப்பு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- மொத்தமுள்ள 124 நகராட்சிகளில், 123 நகராட்சிகளில் குடிநீர் விநியோக நிலை திருப்திகரமான நிலையில் உள்ளது. பற்றாக்குறை ஏற்படும் நிலையில் உள்ள காயல்பட்டினம் நகராட்சியில் சிறப்பு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- மொத்தமுள்ள 528 பேரூராட்சிகளில், 523 பேரூராட்சிகளில் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 4 பேரூராட்சிகளில் (மதுரை–எழுமலை, வாடிப்பட்டி, தேனி–காமயக்கவுண்டன்பட்டி, விருதுநகர்–சேத்துார்) இரண்டு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**<u>ஊரக பகுதிகள்</u>**

- 12524 ஊரக உள்ளாட்சி அமைப்புகளில், 541 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் தனி குடிநீர் திட்டங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

- ஊரக உள்ளாட்சி அமைப்புகளால், மொத்தம், 1.07 இலட்சம், விசைப்பம்புகள், 1.04 லட்சம் சிறு மின்விசைப் பம்புகள், 2.10 லட்சம் கைபம்புகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

- மொத்தமுள்ள 12524 கிராம ஊராட்சிகளில், குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலையில் உள்ள 7929 கிராம ஊராட்சிகளில் சிறப்பு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- கோடைக்காலத்தில் ஏற்படும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கி, போதிய அளவில் குடிநீர் வழங்கும் பொருட்டு, விசைப் பம்புகளில் உள்ள மின் மோட்டார் திறனை அதிகரித்தல், ஆழ்துளை குழாய் கிணறுகளை சுத்தப்படுத்துதல் மற்றும் ஆழப்படுத்துதல், புதிய ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைத்தல், லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல் உள்ளிட்ட நீராதார புனரமைப்பு பணிகள் **ரூ.703.43 கோடி** மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

தமிழகத்தில் உள்ள சென்னை நீங்கலான மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் கோடை கால குடிநீர்த் தேவையை சமாளிக்க மொத்தம் சுமார் **ரூ.894.27 கோடி** மதிப்பீட்டில் புதிய ஆழ்துளை

கிணறுகள் அமைத்தல், பழைய ஆழ்துளை கிணறுகளை புதுப்பித்தல், லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல், பழுதடைந்த மோட்டார்கள் மாற்றுதல், மின் ஆக்கிகள் வாடகைக்கும், புதிதாகவும் வாங்குதல், கைபம்புகள் நிறுவுதல், பைப்லைன் புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பருவ மழை பொய்த்ததன் காரணமாக கோடை காலத்தில் ஏற்படவுள்ள குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க பொது மக்கள் அனைவரும் குடிநீரை வீணாக்காமல் சிக்கனமான முறையில் பயன்படுத்த வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார். மேலும் பொது மக்கள் குடிநீரை மிகவும் சிக்கனமான முறையில் குடிநீர் பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படுத்த ஊடகங்கள் மற்றும் செய்தித் தாள்கள் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

மேலும் மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் மாநகராட்சி பொறியாளர்கள், நகராட்சி ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் ஆகியோர் தங்கள் பகுதிகளில் குடிநீர் வழங்கல் பணிகளை காலை 6.00 மணி முதல் நேரில் ஆய்வு செய்தும் மாலையில் அனைத்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டும் குடிநீர் வழங்கல் பணிகளை சிறப்புக் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அதனை துறையின் உயர் அலுவலர்கள் நேரில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

மேலும், சென்னை பெருநகர மாநகராட்சி உள்ளிட்ட 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் மற்றும் ஊராட்சி பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் சாலைப் பணிகள், பாதாள சாக்கடைத் திட்டங்கள், மழைநீர் வடிகால் பணிகள், எல்இடி தெருவிளக்குகள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மேதகு அளுநரின் உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கை அறிவிப்புகள், மானியக் கோரிக்கை அறிவிப்புகள், மாவட்ட ஆட்சியர் கூட்ட அறிவிப்புகள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட சிறப்பு அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி,இஆப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு ஹன்ஸ்ராஜ் வர்மா,இஆப., தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன முதன்மை செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.டபிள்யு சி.டேவிதார், இஆப., தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி காகர்லால் உஷா இஆப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.அருண்ராய்,இஆப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.க.மகரபூஷணம், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறையின் இயக்குநர் திரு கா.பாஸ்கரன்,இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி. சாந்தா இஆப., ஊரக வளர்ச்சித்துறையின் கூடுதல் இயக்குநர்கள் மற்றும் பொறியாளர்கள், பெருநகர

சென்னை மாநகராட்சியின் துணை ஆணையர்கள், முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர், அனைத்து மாநகராட்சிகளின் ஆணையர்கள் மற்றும் மாநகரப் பொறியாளர்கள், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய பொறியியல் இயக்குநர் மற்றும் பகுதி பொறியாளர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியியல் இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர்கள், அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இன்று (24.01.2017) சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்தும், கோடை காலத்தில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் மற்றும் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி,இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு ஹன்ஸ்ராஜ் வர்மா,இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன முதன்மை செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.டபிள்யு சி.டேவிதார், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி காகர்லா உஷா இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.அருண்ராய்,இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.க.மகரபூஷணம், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறையின் இயக்குநர் திரு கா.பாஸ்கரன்,இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர் வாரியம்

## Photo Caption

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்தும், கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர்ப் பற்றாக்குறையை சமாளிக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் மற்றும் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் குறித்தும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கத்தில் இன்று (24.01.2017) விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி,இஆப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு ஹன்ஸ்ராஜ் வர்மா,இஆப., தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன முதன்மை செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.டபிள்யு சி.டேவிதார், இஆப., தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி காகர்லால் உஷா இஆப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.அருண்ராய்,இஆப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.க.மகரபூஷணம், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறையின் இயக்குநர் திரு கா.பாஸ்கரன்,இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறையின் கூடுதல் இயக்குநர்கள் மற்றும் பொறியாளர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் துணை ஆணையர்கள், முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர், அனைத்து மாநகராட்சிகளின் ஆணையர்கள் மற்றும் மாநகரப் பொறியாளர்கள், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய பொறியியல் இயக்குநர் மற்றும் பகுதி பொறியாளர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியியல் இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர்கள், அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

. . . . . . .